சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – அறிவிப்புகள் – மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் 2021 - 2022- ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிக்கை - 2021-2022-ஆம் கல்வியாண்டு முதல் முழு நேர முனைவர் பட்டப்படிப்பிற்கான கல்வி ஊக்கத்தொகை திட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு குடும்ப ஆண்டு வருமானத்தை ரூ.8.00 இலட்சமாக உயர்த்தியும் மற்றும் ஒரு மாணவருக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் 1600 மாணாக்கர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல் – ஆணை - வெளியிடப்படுகின்றன..

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை

அரசாணை (நிலை) எண்.96

நாள் 25.11.2021
பிலவ வருடம் கார்த்திகை 9 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.5, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3)துறை, நாள் 29.01.2014.
2) அரசாணை (நிலை) எண்.58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3)துறை, நாள் 21.09.2017.
3) அரசாணை (ப) எண்.82, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3)துறை, நாள் 27.04.2021.
4) ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண். உ_3/18769/2021, நாள் 20.07.2021 மற்றும் 27.08.2021.

*********

ஆணை :-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2013-2014-ஆம் கல்வியாண்டு முதல் முழு நேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டினைச்

சேர்ந்த மொத்தம் 700 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/ மாணவிகளுக்கு நபர் ஒன்றுக்கு தலா ரூ.50,000/-வீதம் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்பிற்கான ஊக்கத்தொகை பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கையினை 2017-2018-ஆம் கல்வியாண்டு முதல் 700 லிருந்து 1200 ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2020-2021-ஆம் கல்வியாண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு முழு நேர முனைவர் பட்டப் படிப்பிற்கான ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 1200 பயனாளிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்க 2021-2022-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.6,00,00,000/- (ரூபாய் ஆறு கோடி மட்டும்) ஆதிதிராவிடர் நல ஆணையரின் பதவி பெயரிலான தன்பெயர் வைப்புக் கணக்கில் வரவு வைத்து செலவிட அனுமதியளித்து அரசு ஆணையிட்டது.

4. மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்கள் 2021-2022-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> "முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டமும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்டு, கல்வி உதவித்தொகை வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவில் உயர்த்தப்படும், இத்திட்டதிற்க்கான நிதி ஒதுக்கீடு 16 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்."

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர், 2021-2022-ஆம் நிதியாண்டிற்கு ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வழங்கப்பட்டு வரும் முழுநேர முனைவர் பட்டப் படிப்பிற்கான ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.8.00 இலட்சமாக உயர்த்தி, ஆண்டிற்கு 1600 மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகையினை ஒரு மாணவருக்கு ரூ.1,00,000/- ஆக உயர்த்தியும், ரூ.15,59,00,000/-னை கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்தும், அடுத்து வரும் நிதியாண்டு (2022-2023) முதல் ரூ.16,00,00,000/- கோடி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2021-2022-ஆம் கல்வி ஆண்டு முதல் முழு நேர முனைவர் பட்டப்படிப்பிற்கான ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.8.00 இலட்சமாக உயர்த்தியும், ஒரு மாணவருக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் 1600 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

7. மேலும், 2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட நிதியொதுக்கீட்டில் உள்ள ரூ.16,00,00,000/-இல் மீதமுள்ள ரூ.10,00,00,000/-னை (ரூபாய் பத்து கோடி மட்டும்) ஆதிதிராவிடர் நல ஆணையரின் பதவி பெயரிலான தன்பெயர் வைப்புக் கணக்கில் வரவு வைத்து செலவிடவும், 2021-2022-ஆம் ஆண்டிற்கு முழுநேர முனைவர் பட்டப்படிப்பிற்கான ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தினை இணையதள வாயிலாக மட்டுமே செயல்படுத்த வேண்டும் எனவும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. தன்பெயர் வைப்புக் கணக்கில் தொகைகள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் எதிர் வரவு வைக்கப்பட வேண்டும்.

> "K. வைப்புகளும் முன்பணமும் (b) வட்டியில்லா வைப்புகள் 8443.00 சிவில் வைப்புகள் 106 தன் பெயர் வைப்புகள் AA தன் பெயர் வைப்புகள்
>
> (தகவல் தொகுப்பு குறியீடு 8443 00 106 AA 000F) (வரவுகள்)"

9. மேலே பத்தி 7-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் -01-ஆதிதிராவிடர் நலன்-277-கல்வி மாநில செலவினங்கள் -KW-முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கு நிதியுதவி-312-படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும்-02-மெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்பு"
>
> (ததொகு.2225 01 277 KW-31202)

10. இவ்வரசாணையின்படி துவங்கப்படும் தன் பெயர் வைப்புக் கணக்குகள் 31.03.2022 அன்று தவறாமல் முடிக்கப்படுவதுடன், அரசாணை (நிலை) எண்.395,

நிதித் (சம்பளங்கள்) துறை, நாள் 07.08.1998-இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும் எனவும் ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.43094/நிதி(ஆதி(ம)பந)/2021, நாள் 22.10.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:-
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை600 006/18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 600 001/5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குயினர் நல அலுவலர்கள்
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
நிதித் (ஆதி(ம)ப.ந) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/11/2021.
பிரிவு அலுவலர்

25/11/2021